இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 86 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 19 – வியாழக்கிழமை 05 நவம்பர் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 86 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 19 - Thursday 05 November 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

“பெரியார் அறிவுலகம்” அமைத்து திக்கெட்டும் திராவிடப் பண்பாட்டை நிலைநிறுத்திய

‘திராவிட நாயகர்’ மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு விழா!

கோவையில் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்றது!

கோவை, நவ. 5 -

“பெரியார் அறிவுலகம்” அமைத்து திக்கெட்டும் திராவிடப் பண்பாட்டை நிலை நிறுத்திய ‘திராவிட நாயகர்’ - தி.மு.கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கோவை யில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில், திராவிடர் கழகம் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது.

இவ்விழா பற்றிய விவரம் வருமாறு:-

தமிழ்ச் சமூகத்தை அறிவுச் சமூகமாக்க, கோவை மாநகரில் திராவிட மாடல் அரசால் கட்டி யெழுப்பப்பட்ட பெரியார் அறிவு லகம், சமீபத்தில் திறப்பு விழா கண்டிருக்கிறது.

சுமார் 7 ஏக்கர் நிலப்பரப்பில், 1.98 இலட்சம் சதுர அடி பரப்பள வில், தரை மற்றும் 7 தளங்களு டன் சுமார் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மிகப் பிரம்மாண்ட மாக உருவாக்கப்பட்டுள்ளது, இந்த அறிவுலகம்.

1.25 இலட்சத்துக்கும் மேற்பட்ட நூல்கள் கொண்ட நூலகம் மற்றும் ‘டிஜிட்டல் நூலகத்தில் குழந்தைகள் நூலகம்”, ‘அறிவி யல் மையம்’, ‘கோளரங்கம்”,



‘டி.என்.பி.எஸ்.சி’, ‘யூ.பி.எஸ்.சி’ போன்ற போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கான படிப்பறைகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்கள் நடத்த, நவீன அரங்கங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

கோவையின் தனிப்பெரும் அடையாளம்!

கோவையின் தனிப்பெரும் அடையாளமாக உருவாகியுள்ள இந்த பெரியார் அறிவுலகம்; நவம்பர் 6, 2024 இல், அன்றைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, திராவிட மாடல் ஆட்சிக்காலத் திலேயே கட்டி முடிக்கப்பட்டது. இது சமீபத்தில் திறப்பு விழா கண்டிருக்கிறது.

இதனையொட்டி திராவிடர் கழகம் சார்பில் தந்தை பெரியார் 148-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா - ‘பகுத்தறிவுப் பேராசான்’ தந்தை பெரியாரின் பெயரில், மாபெரும் அறிவுலகத்தை அமைத்துத் தந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா கோவை வ.உ.சி. மைதானத்தில் நேற்று (4.11.2026 புதன்கிழமை) நடைபெற்றது.

இவ்விழா திருத்தணி பன்னீர் செல்வம், உறந்தை கருங்குயில் கணேசன் குழுவினர் வழங்கும் ‘பெரியார் கண்ட அறிவுலகம்’ இசை நிகழ்ச்சியுடன் தொடங் கியது.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை வகிக்கிறார்!

இவ்விழாவில் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, துரை.செந்தமிழ்செல்வன், தளபதி முருகேசன், தொண்டாமுத் தூர் அ.ரவி, இரா.ஜெயக்குமார், வழக்குரைஞர் ஆ.பிரபாகரன், வழக்குரைஞர் மு.சென்னியப்பன், மருத்துவர் இரா.கவுதமன், த. சண்முகம், நாத்திக.பொன்முடி,



சு.வேலுச்சாமி, யாழ்.ஆறுச்சாமி, மு.நாகேந்திரன், சி.மாரிமுத்து, க.கிருஷ்ணன், து.நல்லசிவம், தி.க.செந்தில்நாதன், க.வீரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திராவிடர் கழக பொதுச் செய லாளர் வீ.அன்புராஜ் வரவேற்புரை யாற்றினார்.

திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் சிறப்புரையாற்றினார்.

விழாவிற்கு திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையேற்று நன்றி பாராட்டுரை வழங்கினார்.

பாராட்டு விழாவில் சமூகநீதிக் கான சரித்திர நாயகர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர் கள் ஏற்புரையாற்றினார்.

ம.சந்திரசேகர் நன்றி கூறினார். ச.பிரின்சு என்னாரெசு பெரியார் இணைப்புரை நிகழ்த்தினார்.

திராவிடர் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழா வில் கழக முன்னணியினர், திராவிடர் கழக நிர்வாகிகள், செயல் வீரர்கள், பொதுமக்கள் திரளாகப் பங்கேற்று சிறப்பித்தனர்.

‘தூயசக்தி’ த.வெ.க.வின் மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர்

‘குட்கா’ சி.விஜயபாஸ்கருக்கு அமலாக்கத்துறை சம்மன்!

சொத்துக்குவிப்பு வழக்கில் நேரில் ஆஜராக உத்தரவு!

சென்னை, நவ. 5 -

வருமானத்திற்கு அதிகமாக 36 கோடி ரூபாய் அளவுக்கு சொத்து குவித்த வழக்கில் அ.தி.மு.க. முன்னாள் அமைச் சரும், தற்போதைய த.வெ.க. நிர்வாகியுமான சி.விஜய பாஸ்கருக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சி யில் சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சராக இருந் தவரும், தற்போதைய த.வெ.க. நிர்வாகியுமான சி.விஜய பாஸ்கர், தான் பதவி வகித்த காலத்தில் வருமானத்துக்கு அதி கமாக சொத்து குவித்ததாக புகார் எழுந்தது. இதுதொடர்பாக வரு மான வரித்துறை மற்றும் அம லாக்கத்துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வரு கிறது. விஜயபாஸ்கரின் வீடு உள்ளிட்ட இடங்களில் ரெய்டு நடத்தப்பட்டநிலையில், கடந்த 2024ஆம் ஆண்டு விஜய பாஸ்கர் மற்றும் அவரது மனைவி ரம்யா ஆகிய இருவரி டமும் விசாரணை நடத்தப்பட் டது. அப்போது, அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப் பட்டன.

இந்நிலையில், தனது குற்றப் பத்திரிகையில், வருமானத்திற்கு அதிகமாக 36 கோடி ரூபாய் அளவுக்கு சொத்து சேர்த்ததாக விஜயபாஸ்கார் மீது வருமான வரித்துறை புகார் தெரிவித்தது.

இதுதொடர்பாக சி.விஜய பாஸ்கருக்கு அமலாக்கத்துறை தற்போது மீண்டும் சம்மன் அனுப்பியுள்ளது. இதேபோல், அவரது மனைவி ரம்யாவுக்கும் சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. வரும் வெள்ளிகிழமை அன்று சென்னையில் உள்ள அமலாக் கத்துறை அலுவலகத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 2026 சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சி.விஜயபாஸ்கர், தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜி னாமா செய்துவிட்டு த.வெ.க. வில் இணைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தி.மு.க. ஐ.டி., விங் விமர்சனம்!

இந்நிலையில், தி.மு.க. ஐ.டி. விங் நேற்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், “இடைத்தேர்தல் வாக்கிற்காக புதுக்கோட்டை சென்ற டம்மி யின் த.வெ.க washing machine-ல் வெளுத்தும், குட்கா பாஸ்கரின் கரை போகவில்லை என ED சம்மன் அனுப்பியுள் ளது” என்று விமர்சித்துள்ளது.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம்!

மிகப்பெரிய போராட்டம் வெடிக்கும்!

த.வெ.க. அரசுக்கு மீனவர்கள் எச்சரிக்கை!

சென்னை, நவ. 5 - பட்ட இடத்தில் உள்ள பாக வீட்டு வசதி வாரிய குடி யிருப்புகளை இடிக்க ஒப்புந்தப்புள்ளி கோரப் பட்டுள்ளது.

விஜய் வீட்டின் எதிரே தலைமைச் செயலகம் அமைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இந்த விவகாரத்தில் த.வெ.க. அரசு அடாவடி யுடன் செயல்பட்டு வரு கிறது. இதனால் மீனவ மக்கள் த.வெ.க. அர சுக்கு கடும் எதிர்ப்பை பதிவு செய்து வருகின்ற னர். தங்கள் வாழ்வாதா ரத்தை அழிக்கும் நோக் கில் பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயல கம் கட்ட முற்பட்டால் மிகப்பெரிய போராட் டம் வெடிக்கும் என எச் சரிக்கை விடுத்துள்ளனர்.

புதிய தலைமைச் செய லகம் கட்டுவது தொடர் பாக கருத்துக்கேட்பு கூட்டம் என்பது வெறும் கண் துடைப்பு என்று மீனவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். எந்த வொரு கருத்துக்கேட்பு கூட்டத்திலும் பங்கேற்க மாட்டோம் என்றும், கூட்டத்தை புறக்கணித்து எதிர்ப்பை பதிவு செய் வோம் என்றும் மீனவர் கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, மாவட்ட ஆட்சியர் அலு வலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற விருந்த புதிய தலைமைச் செயலகத்துக்கான கருத் துக்கேட்பு கூட்டத்தை த.வெ.க. அரசு ஒத்தி வைத்துள்ளது. கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதற் கான காரணத்தை தெரி விக்க அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

புதுப்பட்டினம் பகுதியில் மீனவர்கள் கருப்புக் கொடி ஏந்தி போராட்டம்